தங்கமுருகன்
ஜுவல்லர்ஸ் A/c
267, மெயின்ரோடு, நகைக்கடை பஜார்,
சங்கரன்கோவில்
97893 91528 - 96299 64324

சக்கர வியூகம்
SAKKRA VIYUGAM
புலனாய்வு நாளிதழ்
"தேமதுரத் தமிழோசை உலகமெலாம்"

FLY TOWARDS
DIGITAL INNOVATION
Services / சேவைகள்
✓DIGITAL MARKETING
✓WEB DEVELOPMENT
✓SOFTWARE DEVELOPMENT
9080999823
7695883647
வடக்கு ரத வீதி,சங்கரன்கோவில்

Website: www.sakkraviyugam.com PRGI:TNTAM/25/A1018 Email: sakkraviyugam@gmail.com

VOLUME : 01 ISSUE: 296 19.04.2026 SUNDAY CHITHIRAI: 6 PRICE : RS.5/-

மலர் : 01 இதழ் : 296 19.04.2026 ஞாயிற்றுக்கிழமை சித்திரை : 6 விலை : ரூ.5/-



# நல்லாறு சிறப்பு மலர்

# "நல்லாறு"

## "மீட்கப்பட வேண்டியது வெறும் ஆறல்ல... ஒரு பண்பாடு!"

## "வாக்குக்காக வருபவர்களே... நதியை மீட்டெடுப்பீர்!"

நல்லாறு இதன் பெயரிலேயே இதன் சிறப்பு அடங்கியுள்ளது. 'நலன் தரும் ஆறு' என்பதே மருவி நல்லாறு என்றானது. கொங்கு நாடு "நன்னீர் நாடாக" இருந்தபோது, நொய்யல் மற்றும் நல்லாறு ஆகிய நதிக்கரைகளில் பல நாகரிகங்கள் செழித்து வளர்ந்தன. குறிப்பாக, அவிநாசி லிங்கேஸ்வரர் கோவில் மற்றும் அதன் சுற்றுவட்டாரப் பகுதிகளின் நிலத்தடி நீர் மட்டத்தைப் பாதுகாப்பதில் நல்லாற்றுக்கு மிகப்பெரிய பங்கு உண்டு.

அன்னூர் பகுதியில் தொடங்கி சுமார் 50 கிலோமீட்டர் தூரம் பயணித்துத் திருப்பூரின் நஞ்சராயன் குளத்தை (பறவைகள் சரணாலயம்) வந்தடைந்து, பின் நொய்யலில் சங்கமிக்கிறது. ஒரு காலத்தில் 150 முதல் 250 அடி வரை பிரம்மாண்டமாக அகன்று ஓடிய இந்த ஆறு, இன்று ஆக்கிரமிப்புகளால் பல இடங்களில் குறுகி ஒரு சாக்கடைக் கால்வாய் போல மாற்றப்பட்டுள்ளது.

### ஆன்மீக மற்றும் கலாச்சாரத் தொடர்பு:

*அவிநாசி லிங்கேஸ்வரர்:* கொங்கு நாட்டின் ஏழு சிவத்தலங்களில் ஒன்றான அவிநாசி அவிநா சிலிங்கேஸ்வரர் கோவில் இந்த நதிக்கரையில்தான் அமைந்துள்ளது. வரலாற்றின் படி, நல்லாற்றில் வெள்ளம் வரும் காலங்களில் ஆற்றின் தண்ணீர் நேரடியாகக் கருவறைக்குள் புகுந்து இறைவனுக்கு 'அபிஷேகம்' செய்யும் நிகழ்வுகள் நடந்துள்ளன.

அவிநாசியில் முதலை விழுங்கிய சிறுவனைச் சுந்தரர் பதிகம் பாடி மீட்டெடுத்த அதிசயம் நிகழ்ந்தபோது, அந்தப் பகுதி நீர்நிலைகளுடன் நல்லாறு நெருங்கிய தொடர்புடையதாகக் கருதப்படுகிறது.

திருமுருகன்பூண்டி* கோவிலில் மொத்தம் மூன்று முக்கியமான தீர்த்தங்கள் உள்ளன.

வரலாற்று ரீதியாக, இங்குள்ள தீர்த்தக் கிணறுகளில் நீராடி முருகநாதரை வழிபட்டால், கடும் மன உளைச்சல் மற்றும் சித்த பிரம்மை (மனநல பாதிப்புகள்) நீங்கும் என்பது பல நூற்றாண்டுகளாகத் தொடரும் நம்பிக்கை. இன்றும் பல ஊர்களில் இருந்து மக்கள் இதற்காக இங்கு வருகிறார்கள்.

சுக்ரீஸ்வரர் கோவில்:* சர்க்கார் பெரியபாளையத்தில் உள்ள 2000 ஆண்டுகள் பழமையான சுக்ரீஸ்வரர் கோவிலைச் சுற்றிலும் இந்த நதியின் நீர் ஓடும் வகையில் அன்று கட்டடக்கலை வடிவமைக்கப்பட்டிருந்தது. இன்று அந்தப் பகுதிகளில் கழிவுநீர் ஓடுவது வரலாற்றுச் சோகம்.

### கல்வெட்டு மற்றும் வரலாற்றுச் சான்றுகள்

புகைப்படங்கள் பொதுவெளியில் மிகக்குறைவாகவே உள்ளன. இருப்பினும், கல்வெட்டு ஆதாரங்கள் இந்த நதி ஒரு காலத்தில் எவ்வளவு செழிப்பாக இருந்தது என்பதைத் தெள்ளத்தெளிவாகப் பறைசாற்றுகின்றன.

அவிநாசி மற்றும் திருமுருகன்பூண்டி பகுதிகளில் உள்ள கல்வெட்டுகளில் இந்த நதி மற்றும் அதன் நீர் மேலாண்மை குறித்த குறிப்புகள் காணப்படுகின்றன.

1. அவிநாசியப்பர் கோவில் கல்வெட்டுகள்:

நீர்ப்பாசன முறை: கொங்குச் சோழர்கள் மற்றும் பாண்டியர் காலத்துக் கல்வெட்டுகளில், நல்லாற்றிலிருந்து பிரிந்து செல்லும் கால்வாய்கள் மற்றும் அதன் மூலம் நன்செய் நிலங்கள் பயன்பெற்றது குறித்த குறிப்புகள் உள்ளன. குறிப்பாக, "நல்லாற்றுப் பாசனம்" என்ற சொல் பல இடங்களில் நிலதானம் தொடர்பான கல்வெட்டுகளில் இடம் பெற்றுள்ளது.

ஏரி பராமரிப்பு:* அவிநாசி ஏரிக்கு நல்லாற்றிலிருந்து நீர் கொண்டு வரப்பட்டதும், அதற்காகப் பொதுமக்கள் மற்றும் வணிகர்கள் வழங்கிய வரிப் பணம் (ஏரி ஆயம்)



பற்றிய செய்திகள் முதலாம் குலோத்துங்க சோழன் காலத்துக் கல்வெட்டுகளில் காணப்படுகின்றன.

2. திருமுருகன்பூண்டி கல்வெட்டுச் சான்றுகள்:

திருமுருகன்பூண்டி கோவில் கல்வெட்டுகளில், கோவிலைச் சுற்றியுள்ள நிலங்களின் எல்லைகளைக் குறிப்பிடும்போது "நல்லாறு" ஒரு இயற்கை எல்லையாகக் குறிக்கப்பட்டுள்ளது. இது அந்த நதி அக்காலத்தில் ஒரு நிலையான நீர்நிலையாக இருந்ததை உறுதிப்படுத்துகிறது.

### பழைய புகைப்படங்கள் குறித்த குறிப்பு

தற்போது கைவசம் 100 ஆண்டுகளுக்கு முந்தைய தெளிவான புகைப்படங்கள் இல்லை என்றாலும்,

*பிரிட்டிஷ் கால வரைபடங்கள் :* 19ம் நூற்றாண்டின் தொடக்கத்தில் கிழக்கிந்திய கம்பெனி தயாரித்த 'Topographical Survey' வரைபடங்களில் நல்லாற்றின் முழுமையான வழித்தடம் மற்றும் அது நொய்யலில் கலக்கும் இடம் துல்லியமாகக் குறிக்கப்பட்டுள்ளது.

அரசு ஆவணக் காப்பகம்:* சென்னை ஆவணக் காப்பகத்தில் (Madras Archives) உள்ள பழைய பாசனத் திட்டக் கோப்புகளில், நல்லாற்றின் குறுக்கே இருந்த பழைய தடுப்பணைகளின் வரைபடங்கள் இருக்க வாய்ப்புள்ளது.

கழிவுநீர் பாதிப்பு:* திருப்பூர் மாநகருக்குள் நுழையும் போது நூற்றுக்கணக்கான சாய ஆலைகளின் கழிவுநீரும், குடியிருப்புக் கழிவுகளும் இதில் கலக்கின்றன.

*நஞ்சராயன் குளம்:* 400 ஏக்கர் பரப்பளவு கொண்ட நஞ்சராயன் குளம் இன்று பறவைகள் சரணாலயமாக அறிவிக்கப்பட்டிருந்தாலும், நல்லாற்றின் வழியே வரும் கழிவுநீரால் அதன் இயற்கைச் சூழல் பாதிக்கப்பட்டு வருகிறது.

நல்லாறு பாதுகாப்பு இயக்கம்
REG No. SRG/THIRUPPUR/2/2026/21-01-2026



### மக்கள் இயக்கமாக மாறிய நல்லாறு பாதுகாப்பு இயக்கம்

திருப்பூர் மாவட்டத்தின் முக்கிய நீர் ஆதாரமான நல்லாறு, கடந்த பல ஆண்டுகளாக ஆக்கிரமிப்புகளாலும், கழிவுநீர் கலப்பாலும் தன் பொலிவை இழந்து வருகிறது. இந்நிலையில், இந்த நதியை மீட்டெடுக்க உருவான 'நல்லாறு பாதுகாப்பு இயக்கம்' இன்று ஒரு மாபெரும் மக்கள் இயக்கமாக உருவெடுத்துள்ளது.

நல்லாற்று நாயகர்கள்:

இந்த இயக்கத்தைத் தொடங்கி, இதனை மக்கள் சக்தியாக மாற்றிய அந்த 'நல்லாற்று நாயகர்கள்' யார் யார் என்பது குறித்த விவரங்கள் எமது அடுத்தடுத்த இதழ்களில் பிரத்யேகமாக வெளிவரவுள்ளன. தற்போது 650க்கும் மேற்பட்ட தன்னார்வலர்களைக் கொண்டுள்ள இந்த இயக்கம், நல்லாற்றைப் பாதுகாப்பதையே லட்சியமாகக் கொண்டு செயல்பட்டு வருகிறது.

குறிப்பாக அவிநாசி மற்றும் திருப்பூர் வடக்கு ஆகிய சட்டமன்றத் தொகுதிகளின் வழியாக ஓடும் நல்லாற்றின் தற்போதைய அவல நிலையைச் சுட்டிக்காட்டி, அந்தத் தொகுதிகளின் வேட்பாளர்களிடம் இந்த இயக்கம் கோரிக்கை மனுக்களை வழங்கியுள்ளது.

வேட்பாளர்கள் உறுதி:

திமுக, அதிமுக, பாஜக, தவெக உள்ளிட்ட அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் வேட்பாளர்கள் முதல் சுயேச்சை வேட்பாளர்கள் வரை அனைவரும், "நாங்கள் வெற்றி பெற்றால் நல்லாற்றைத் தூய்மைப்படுத்தித் தருவோம்" என இந்த இயக்கத்திடம் உறுதி அளித்துள்ளனர். இது நல்லாற்று நாயகர்களுக்குக் கிடைத்த முதல் வெற்றியாகப் பார்க்கப்படுகிறது.

வேட்பாளர்கள் தங்களது வாக்குறுதியாக மட்டும் அளிக்காமல், அதை ஒரு செயல்திட்டமாக ஏற்க வேண்டும் என இந்த மக்கள் இயக்கம் வலியுறுத்தியுள்ளது குறிப்பிடத்தக்கது. அவிநாசி மற்றும் திருப்பூர் வடக்கு சட்டமன்றத் தொகுதியில் நடைபெற உள்ள பொதுத்தேர்தலில், முன்னெப்போதும் இல்லாத வகையில் ஒரு நதி மீட்பு விவகாரம் விஸ்வரூபம் எடுத்துள்ளது. சிதைந்து கிடக்கும் நல்லாற்றினைத் தூர்வாரி மீட்டெடுக்க, 'நல்லாறு பாதுகாப்பு இயக்கம்' என்ற மக்கள் இயக்கம் தற்போது ஒரு மாபெரும் சக்தியாக உருவெடுத்துள்ளது.

அவிநாசி மற்றும் சுற்றுவட்டாரக் கிராம மக்களின் உணர்வுகளோடு கலந்த இந்த விவகாரத்தை, நல்லாறு பாதுகாப்பு இயக்கம் மிகச் சிறப்பாகக் கையில் எடுத்துள்ளது. "நல்லாறு தூர்வாரப்படும்" என்பதை இது தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களுக்கு ஒரு தார்மீக பொறுப்பினையும், அழுத்தத்தையும் ஏற்படுத்தியுள்ளது.




■ 1.திருப்பூர் திருமுருகன் பூண்டி மற்றும் வடக்கு தொகுதி வழியாக சென்று நஞ்சராயன் குளத்தில் சென்றடையும் நல்லாற்றை தூய்மைப்படுத்தி மக்களுக்கு தூய தன்னீர் தருவோம்.

# துப்பாக்கிச் சூடு சம்பவத்தால் தகிக்கும் ஆலங்குளம் தொகுதி யாருக்கு சாதகம்?

தென்காசி, ஏப்.19-

ஆலங்குளம் சட்டப் பேரவைத் தொகுதியில் மொத்தம் 2,53,408 வாக்காளர்கள் உள்ளனர். விவசாயம், பீடி சுற்றும் தொழில், செங்கல்சூளை, அரிசி ஆலைகள் அதிகமாக உள்ள தொகுதி இது.

வேலை வாய்ப்பு கிடைக்கும் வகையில் தொழிற்சாலைகளை கொண்டுவர வேண்டும், ஆலங்குளத்தில் அரசு போக்கு வரத்துக் கழக பணிமனை அமைக்க வேண்டும் என்பன உள்ளிட்ட பல்வேறு எதிர்பார்ப்புகள் இத்தொகுதி மக்களிடம் உள்ளன.



ஆலங்குளம் தொகுதியில் திமுக சார்பில் பால் மனோஜ் பாண்டியன், அதிமுக சார்பில் கே.ஆர்.பி.பிரபாகரன், தவெக சார்பில் விபின் சக்கரவர்த்தி, நாதக சார்பில் பால்ராஜ் மற்றும் பல்வேறு கட்சிகள், சுயேச்சைகள் உட்பட மொத்தம் 13 வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர்.

திமுக தனி வருவாய் வட்டம்: திமுக வேட்பாளர் பால் மனோஜ் பாண்டியன், கடந்த முறை சட்டப்பேரவை உறுப்பினராக இருந்த போது, தொகுதிக்கு தன்னால் கொண்டுவரப்பட்ட திட்டங்களை பட்டியலிட்டு வாக்கு கேட்டு வருகிறார்.

மேலும், கடந்த 5 ஆண்டு கால திமுக அரசின் சாதனைகள், தற்போது திமுக தேர்தல் அறிக்கையில் தெரிவித்த பல்வேறு திட்டங்களையும் எடுத்துக் கூறி பிரச்சாரம் செய்கிறார். கடையத்தை தலைமையிடமாகக் கொண்டு தனி வருவாய் வட்டம் உருவாக்கப்படும், தொகுதி வளர்ச்சிக்கு தேவையான திட்டங்கள் நிறைவேற்றப்படும் என்று வாக்குறுதி அளித்து வருகிறார்.

அதிமுக கருப்பட்டி ஏற்றுமதி: அதிமுக வேட்பாளர் பிரபாகரன், முந்தைய அதிமுக அரசின் திட்டங்களையும், அதிமுகவின் தேர்தல் வாக்குறுதிகளையும் கூறி பிரச்சாரம் செய்து வருகிறார். பனை தொழி லாளர்களின் வாழ்வாதாரத்தை உயர்த்த கருப்பட்டி ஏற்றுமதி தொழிலுக்கு ஏற்பாடு செய்வதாகவும், பனை தொழிலாளர்களுக்கு ஓய்வூதியம் பெற்றுத் தர நடவடிக்கை எடுப்பதாகவும் கூறி வாக்கு சேகரித்து வருகிறார்.

தவெக பெண்களின் பாதுகாப்பு: தவெக வேட்பாளர் விபின் சக்கரவர்த்தி மாற்றத்தை கொண்டுவரவும், பெண்கள் பாதுகாப்பாக இருக்கவும் தனக்கு வாக்களிக்குமாறு பிரச்சாரம் செய்து வருகிறார். மேலும், விஜய் அறிவித்த வாக்குறுதிகளை வாக்காளர்களிடம் கூறி வாக்கு சேகரிக்கிறார்.

நாதக நீர்நிலைகள் பாதுகாப்பு: நாதக வேட்பாளர் பால்ராஜ் கட்சியின் தேர்தல் அறிக்கையில் சொல்லப்பட்ட திட்டங்களை கூறி பிரச்சாரம் செய்து வருகிறார். தொகுதியில் உள்ள நீர்நிலைகளை பாதுகாக்க நடவடிக்கை எடுக்கப்படும், நெல் கொள்முதல் நிலையங்களுக்கு சொந்த கட்டிடம் கட்ட நடவடிக்கை எடுக்கப்படும், ஆலங் குளம் அரசு மருத்துவமனை மேம்படுத்தப்படும், முக்கூடல் பீடி தொழிலாளர் மருத்துவமனை மீண்டும் செயல்படுத்தப்படும் என்பன உள்ளிட்ட பல்வேறு வாக்குறுதிகளை கூறி பிரச்சாரம் செய்து வருகிறார்.

யாருக்கு சாதகம்?

ஆலங்குளம் அருகே மருதம்புத்தூரில் சமீபத்தில் பனை தொழிலாளி மீது காவல்துறை நடத்திய துப்பாக்கிச்சூடு சம்பவம் தேர்தலில் எதிரொலிக்கத் தொடங்கியுள்ளது. அந்த சம்பவத்தை பல்வேறு கட்சிகளின் வேட்பாளர்களும் சுட்டிக்காட்டி, வாக்குகளை தங்களுக்கு சாதகமாக திரட்ட முயன்று வருகின்றனர். துப்பாக்கிச் சூடு சம்பவத்தால் ஆலங்குளம் தொகுதி யாருக்கு சாதகமாக இருக்கும் என்ற தகிப்பு வேட்பாளர்கள், வாக்காளர்கள் மத்தியில் காணப்படுகிறது.



# தூத்துக்குடி மாவட்டத்தில் நேற்று ஒரே நாளில் பயிற்சி மையங்களில் 2,795 தபால் வாக்குகள் பதிவு!

தூத்துக்குடி, ஏப்.19-

தமிழ்நாடு சட்டமன்ற பொதுத்தேர்தலை முன்னிட்டு, தூத்துக்குடி மாவட்டத்தில் தேர்தல் பணிகளில் ஈடுபடவுள்ள வாக்குச்சாவடி தலைமை அலுவலர்கள் மற்றும் அலுவலர்கள் 1, 2, 3 ஆகியோருக்கான இரண்டாம் கட்டப் பயிற்சி வகுப்புகள் 15.4.2026 அன்று நடைபெற்றன. இந்தப் பயிற்சி மையங்களில் தேர்தல் பணியில் உள்ள அலுவலர்களுக்காக தபால் வாக்கு வசதி மையங்கள் அமைக்கப்பட்டு, வாக்குகள் பெறப்பட்டன. இதுகுறித்து தூத்துக்குடி மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சியர் விஷு'' மகாஜன் தெரிவித்துள்ள விவரத்தில்; தூத்துக்குடி மாவட்டத்திலுள்ள 6 சட்டமன்ற தொகுதிகளுக்கும் தனித்தனியாகப் பயிற்சி மையங்கள் அமைக்கப்பட்டிருந்தன.

விளாத்திகுளம் தொகுதிக்கு பயிற்சி மையமாக குமாரகிரி சி.கே.டி. மெட்ரிகுலேஷன் மேல்நிலைப் பள்ளியும், தூத்துக்குடி தொகுதிக்கு காமராஜ் கல்லூரியும் ஒதுக்கப்பட்டிருந்தன. திருச்செந்தூர் தொகுதிக்கு ஆதித்தனார் கலை மற்றும் அறிவியல் கல்லூரியிலும், ஸ்ரீவைகுண்டம் தொகுதிக்கு நாசரேத் மர்காசியஸ் கல்லூரியிலும் பயிற்சிகள் வழங்கப்பட்டன. ஓட்டப்பிடாரம் தொகுதிக்கு ஏ.பி.சி. மகாலட்சுமி மகளிர் கல்லூரியும், கோவில்பட்டி தொகுதிக்கு நாடார் மேல்நிலைப்பள்ளியும் பயிற்சி மையங்களாக செயல்பட்டன. இந்த மையங்களில் முறையே விளாத்திகுளம் மற்றும் ஸ்ரீவைகுண்டம் தொகுதிகளுக்கு தலா 3 வசதி மையங்களும், தூத்துக்குடி மற்றும் கோவில்பட்டி தொகுதிகளுக்கு தலா 2 வசதி மையங்களும், திருச்செந்தூர் மற்றும் ஒட்டப்பிடாரம் தொகுதிகளுக்கு தலா ஒரு வசதி மையமும் அமைக்கப்பட்டிருந்தன.

இந்த வசதி மையங்களில் 15.4.2026 அன்று பதிவான தபால் வாக்குகளின் அடிப் படையில், ஓட்டப்பிடாரம் தொகுதியில் அதிகபட்சமாக 685 வாக்குகளும், ஸ்ரீவைகுண்டம் தொகுதியில் 514 வாக்குகளும் பதிவாகியுள்ளன. விளாத்திகுளம் தொகுதியில் 487 வாக்குகளும், கோவில்பட்டி தொகுதியில் 462 வாக்குகளும், திருச்செந்தூர் தொகுதியில் 344 வாக்குகளும் பதிவாகின. தூத்துக்குடி தொகுதியில் மொத்தம் 303 வாக்குகள் பெறப்பட்டன. மாவட்டம் முழுவதும் உள்ள இந்த 6 சட்டமன்ற தொகுதிகளிலும் சேர்த்து, தூத்துக்குடி மாவட்டத்தைச் சேர்ந்த அலுவலர்களிடமிருந்து 1,422 வாக்குகளும், பிற மாவட்டங்களைச் சேர்ந்த அலுவலர்களிடமிருந்து 1,373 வாக்குகளும் பெறப்பட்டன. ஒட்டு மொத்தமாக நேற்று ஒரே நாளில் பயிற்சி மையங்களில் 2,795 தபால் வாக்குகள் பதிவாகியுள்ளது. இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

# சொத்து விவரங்களை மறைத்ததாக ஆதவ் அர்ஜூனா மீது மேலும் ஒரு வழக்கு:

## உயர் நீதிமன்றத்தில் விரைவில் விசாரணை



சென்னை, ஏப்.19-

தமிழக வெற்றிக் கழகத்தின் வேட்பாளரான ஆதவ் அர்ஜூனா 20க்கும் மேற்பட்ட நிறுவனங்களில் தனது மனைவிக்கு உள்ள சொத்துக்கள் குறித்து வருமான வரித்துறை விசாரணை நடத்தக் கோரி சென்னை உயர் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வில்லிவாக்கம் தொகுதி வாக்காளரான எம். கருணாநிதி உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள மனுவில், தன்னை வெளிப்படையான அரசியல் ஆதரவாளராகவும், அரசியலின் தூய சக்தியாகவும் முன்னிறுத்திக்கொள்ளும் தவெக வேட்பாளர் ஆதவ் அர்ஜூனா, தனது மனைவிக்கு மார்டின் ரியல்கான் உள்ளிட்ட 20க்கும் மேற்பட்ட நிறுவனங்களில் உள்ள தொடர்பு குறித்து விவரங்களை வெளியிடாமல் மறைத்துள்ளார்.

இந்த குற்றச்சாட்டுகள் குறித்து ஏப்ரல் 16ல் அளித்த புகார் மனுமீது எந்த நடவடிக்கையும் இல்லை. ஆதவ் அர்ஜூனாவின் வேட்புமனுவுடன் தாக்கல் செய்துள்ள சொத்து விவரங்களில் உள்ள குறைபாடுகள், தகவல் மறைப்பு, தவறான தகவல் ஆகியவை குறித்து வருமான வரித்துறை ஆரம்பகட்ட விசாரணை நடத்தி, தேர்தலுக்கு முன்பாக அறிக்கை தாக்கல் செய்யுமாறு உத்தரவிட வேண்டும். ஆதவ் அர்ஜூனா தாக்கல் செய்த ஆவணங்களை ஆய்வு செய்ய தேர்தல் ஆணையத்துக்கு உத்தரவிட வேண்டும் என்று கோரியுள்ளார். இந்த வழக்கு தலைமை நீதிபதி எஸ்.ஏ.தர்மாதிகாரி, நீதிபதி ஜி.அருள்முருகன் அமர்வில் விரைவில் விசாரணைக்கு வரவுள்ளது.



# தமிழகத்தின் சட்டம் ஒழுங்கு நிலவரத்தை நினைவில் வைத்து வாக்களியுங்கள்: அண்ணாமலை

திண்டுக்கல், ஏப்.19-

"தமிழகத்தில் கடந்த ஐந்து ஆண்டுகளில் சட்டம் ஒழுங்கு கெட்டுவிட்டது. பாலியல் வன்கொடுமை அதிகரித்துள்ளது. சட்டம் ஒழுங்கை நினைவில் வைத்துக்கொண்டு வாக்களியுங்கள்,'' என பாஜக மாநில முன்னாள் தலைவர் அண்ணாமலை பேசினார்.

திண்டுக்கல் மாவட்டம் வேடசந்தூர் தொகுதி அதிமுக வேட்பாளர் பரமசிவத்தை ஆதரித்து வெள்ளிக்கிழமை (ஏப்.17) காலை பாஜக மாநில முன்னாள் தலைவர் அண்ணாமலை வேடசந்தூர் ஆத்துமேடு பகுதியில் பிரச்சாரம் மேற்கொண்டார்.

அப்போது அவர் பேசியதாவது: அமலாக்கத் துறையை முதன்முதலாக வேடசந்தூருக்கு அழைத்துவந்து இரண்டு நாட்கள் ரெய்டு நடத்திய பெருமை திமுக வேட்பாளருக்கு சேரும். பொங்கல் தொகுப்பில் ஒழுகும் வெள்ளம் கொடுத்தவர்கள் திமுகவினர். என்டிஏ கூட்டணி ஆட்சிக்கு வந்தால், வேடசந்தூர், வடமதுரை பகுதிகளுக்கு காவிரி நீரை கொண்டுவந்து குளங்களை நிரப்ப நடவடிக்கை எடுக்கப்படும். வேடசந்தூர் தொகு தியை அடுத்த கட்டத் திற்கு நகர்த்த நீங்கள் பரமசிவத்தை ஆதரிக்க வேண்டும். நாடாளுமன்றத்தில் சரித்திரமிக்க மசோதாவை கொண்டுவந்துள்ளனர். 33 சதவீத மகளிருக்கு இடஒதுக்கீடு மசோதா மகளிருக்கு உதவி செய்யும்.

முதல்வர் ஸ்டாலின் பொய்பேசி வருகிறார். தமிழகத்திற்கு பிரதிநிதித்துவம் குறைந்துவிடும் என்கிறார். ஆனால், தமிழ்நாட்டில் மக்களவை தொகுதி இடங்கள் 39 ல் இருந்து 59 என உயர்த்தியுள்ளனர். எல்லா மாநிலங்களுக்கும் 50 சதவீத உயர்வு இருக்கும் என்று மத்திய அரசு தெரிவித்துள்ளது.

மகளிரை நாடாளுமன்றத்துக்கு அழைத்துச் செல்ல மகளிர் இட ஒதுக்கீட்டை பிரதமர் கொண்டு வந்துள்ளார்.

தமிழகத்தில் கடந்த ஐந்து ஆண்டுகளில் சட்டம் ஒழுங்கு கெட்டுவிட்டது. பாலியல் வன்கொடுமை அதிகரித்துள்ளது. சட்டம் ஒழுங்கை நினைவில் வைத்து வாக்களியுங்கள்.

குடகனாற்றில் வரும் நீரை ஒரு மந்திரி திருப்பி கொண்டு போய்விட்டார். ஆற்றுக்கு தண்ணீர் வரும் வழியில் தடுப்புசுவர் கட்டி தண்ணீரை திருப்பிவிட்டனர். குடும்ப ஆட்சி இல்லாத மாவட்டமாக திண்டுக்கல்லை நீங்கள் மாற்ற வேண்டும்.

முதல்வர் ஒரு பொம்மை, கீ கொடுத்தால் காலையில் டெல்லி, மதியம் இந்தி, மாலையில் மத்திய அரசு தமிழகத்தை வஞ்சிக்கிறது என்பார்.

வேடசந்தூர் தொகுதிக்கு திமுக கொடுத்த தேர்தல் வாக்குறுதிகள் எதையும் நிறைவற்றவில்லை. பெரிய மாற்றத்தை ஏற்படுத்த அதிமுகவை ஆதரிக்க வேண்டும். தேர்தல் ஆணையம் டிஜிபி, தலைமைச் செயலாளரை மாற்றியுள்ளது. அதேபோல் நீங்கள் முதல்வரை மாற்றி விடுங்கள்.

திமுக வேட்பாளர் சாமிநாதன் எப்பொழுது வேண்டுமானாலும் கைது செய்யப்படுவார் என்பதை மறந்துவிடாதீர்கள். இப்படித்தான் கரூர் சட்டமன்ற உறுப்பினர் கைது செய்யப்பட்டு புழல் சிறையில் இருந்தார். அதனால் அதிமுக வேட்பாளரை ஆதரியுங்கள்''. இவ்வாறு அண்ணாமலை பேசினார்.

பிரச்சாரத்தின்போது, திண்டுக்கல் தொகுதி வேட்பாளர் திண்டுக்கல் சி.சீனிவாசன், பாஜக மேற்கு மாவட்ட தலைவர் ஜெயராமன் உள்ளிட்டோர் உடன் இருந்தனர்.

# சவால் விடும் பழனிவேல் தியாகராஜன் கடும் போட்டி கொடுக்கும் சுந்தர்.சி

மதுரை, ஏப்.19-

மதுரை மத்திய தொகுதியில் தொடர்ந்து இருமுறை சிரமமில்லாமல் வெற்றி பெற்ற திமுக வேட்பாளர் பழனிவேல் தியாகராஜனுக்கு, இந்த முறை அதிமுக கூட்டணி வேட்பாளர் சுந்தர்.சி தேர்தல் களத்தில் கடும் போட்டியை கொடுத்து வருகிறார்.



மதுரை மத்திய தொகுதியில் அதிமுக கூட்டணி சார்பில் புதிய நீதிக் கட்சி வேட்பாளராக சுந்தர்.சி அறிவிக்கப்பட்டு மதுரையில் வந்து இறங்கியதும், மீனாட்சி அம்மன் கோயிலுக்கு சென்று வழிபட்டுவிட்டு பிரச்சாரத்தை தொடங்கினார். அப்போது அவர், "நான் மதுரை மீனாட்சி அம்மன் கோயிலுக்குச் சென்றிருந்தேன். கோயில் பகுதியை பார்க்கும்போது எனக்கு ரொம்ப கஷ்டமாக இருந்தது.

எவ்வளவு பெரிய கட்டமைப்பு வசதிகளை கொண்டு வந்திருக்கலாம். ஆனால், ஆட்சியில் அதிகாரத்தில் இருந்தவர்கள் அதை பற்றியெல்லாம் கவலைப்பட்டதாக தெரியவில்லை. நான் 20 ஆண்டுகளுக்கு முன் வாராணசிக்கு சென்றுள்ளேன். அப்போது இருந்த வாராணசியையும், இப்போது மோடி வந்தபிறகு இருக்கும் வாராணசிக்கும் எவ்வளவு வித்தியாசம் உள்ளது'' என்று கூறி கொளுத்திப் போட்டார்.

மீனாட்சி அம்மன் கோயில் அறங்காவலர் குழுத் தலைவராக, பழனிவேல் தியாகராஜனின் தாயார் ருக்மணி உள்ளார். மேலும், மீனாட்சி அம்மன் கோயில் அவரது மத்திய தொகுதிக்குள் வருகிறது. அதனால், அதிருப்தியடைந்த பழனிவேல் தியாகராஜன், ''சுந்தர்.சியை சினிமா சங்கி, வெளியூரில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட வேட்பாளர், 11ம் வகுப்பு வரை மட்டுமே படித்தவர் என்பதால் அவருக்கு எதையும் புரிந்துகொள்ளும் அறிவு இல்லை, தொகுதி வரலாறு தெரியாதவர்'' என்றெல்லாம் விமர்சித்தார்.

பின்னர் ''ஒவ்வொரு 500 அடிக்கும் ஒரு இடத்தில் என்னுடைய திட்டங்கள் உள்ளன, எழுதி வைத்துக் கொள்ளுங்கள், மே4ம் தேதி சுந்தர்.சி ஷூட்டிங் சென்று விடுவார்'' என சவால் விடுத்தார். பதிலுக்கு சுந்தர்.சியும், குஷ்புவும், பழனிவேல் தியாகராஜனை, ''தலைக்கணம் கொண்டவர், அவரது அதிகார திமிரால்தான் நிதி அமைச்சர் பதவியில் இருந்து பதவியிறக்கம் செய்யப்பட்டார், நாங்கள் படிக்காதவர்கள்தான், ஆனால் எங்கள் வளர்ப்பு சரியாக இருப்பதால் எங்கள் அப்பா, அம்மா பெயரை காப்பாற்றுகிறோம், நாங்கள் இறக்குமதி வேட்பாளர் என்றால், கனிமொழி, மு.க.ஸ்டாலின், அவர்கள் சொந்த தொகுதியிலா போட்டியிடுகிறார்கள்? அவர்களை பார்த்து இந்த கேள்வியை கேட்பாரா? தோல்வி பீதியில் தரமில்லாமல் பேசுகிறார்'' என்று விமர்சனம் செய்தனர்.

செய்தியாளர்கள் சந்திப்பு, பிரச்சாரத்தில் மட்டுமல்லாது, சமூக வலைதளங்களிலும் இரு தரப்பினரும் மோதிக் கொண்டனர். சுந்தர்.சிக்கு ஆதரவாக மு.க.அழகிரி ஆதரவாளர்கள் பி.எம்.மன்னன், எஸ்ஸார் கோபி தலைமையில் அதிமுகவினரும், பழனிவேல் தியாகராஜனுக்கு ஆதரவாக திமுக தலைமை அமைத்த தேர்தல் பணிக்குழுவினரும் தேர்தல் களத்தில் மும்முரமாக பணியாற்றி வருகின்றனர்.

தவெக வேட்பாளர் மதார் பதூருதீன், நாம் தமிழர் வேட்பாளர் அப்துல் ஹக்கீம் ஆகியோர் மத்திய தொகுதியில் சத்தமில்லாமல் தங்கள் பாணியில் பிரச்சாரம் செய்து வருகின்றனர். அவர்களும் இந்த தொகுதியில் கணிசமான வாக்குகளை பெற வாய்ப்புள்ளதாக தெரிகிறது. ஆனால், பழனிவேல் தியாகராஜனுக்கும், சுந்தர்.சிக்கும் இடையேதான் வெற்றிக்கான போட்டி உள்ளதாக கூறப்படுகிறது.

மத்திய தொகுதியை தவிர்த்த உதயநிதி பழனிவேல் தியாகராஜனுக்கு ஆதரவாக கனிமொழி, ப.சிதம்பரம், பழநெடுமாறன், தமிழச்சி தங்கபாண்டியன் போன்றோர் பிரச்சாரம் செய்துள்ளனர். சுந்தர்.சிக்கு ஆதரவாக பழனிசாமி, அண்ணாமலை, குஷ்பு, ஏ.சி.சண்முகம், காளியம்மாள் உள்ளிட்டோர் பிரச்சாரம் செய்துள்ளனர். மதுரை மாவட்டத்தில் நேற்று திமுக வேட்பாளர்கள் பி.மூர்த்தி, கோ.தளபதி, மணிமாறன், வெங்கடேசன் ஆகியோரை ஆதரித்து துணை முதல்வர் உதயநிதி பிரச்சாரம் செய்த நிலையில், அவர் மத்திய தொகுதிக்கு வராமல் புறக்கணித்து சென்றுள்ளார்.

முதல்வரின் மருமகன் சபரீசன், பழனிவேல் தியாகராஜனுக்காக மாநகர திமுக நிர்வாகிகளை தேர்தல் பணியில் முடுக்கிவிடும் நிலையில், உதயநிதி, பழனிவேல் தியாகராஜனுக்காக பிரச்சாரம் செய்யாமல் தவிர்த்தது பேசுபொருளாகியுள்ளது. இது குறித்து திமுக வினரிடம் கேட்டபோது, உதயநிதிக்கு போதுமான நேரம் இல்லாததால், குறிப்பிட்ட தொகுதிகளில் மட்டும் பிரச்சாரம் செய்து சென்றுள்ளார். மற்றபடி இதில் ஒன்றுமில்லை, என்றனர்.

# சட்டமன்றத் தேர்தலை ஒட்டி தமிழகம் முழுவதும் 5,500 சிறப்பு பேருந்துகள் இயக்கப்படும்: அரசு போக்குவரத்துக் கழகம்

சென்னை, ஏப்.19-

சட்டமன்றத் தேர்தலை ஒட்டி தமிழகம் முழுவதும் 5,500 சிறப்பு பேருந்துகள் இயக்கப்படும் என அரசு போக்குவரத்துக் கழகம் அறிவித்துள்ளது. ஏப்ரல் 21 முதல் 23ம் தேதி வரை 3 நாட்கள் சென்னையில் இருந்து பல்வேறு ஊர்களுக்கு சிறப்பு பேருந்துகள் இயக்கப்படுகிறது. ஏப்.21 23 வரை 2,092 தினசரி பேருந்துகளுடன் 5,574 சிறப்பு பேருந்துகள் இயக்க விரைவு போக்குவரத்துக் கழகம் திட்டமிடப்பட்டுள்ளது.








# கள்ளழகர் கோவில் சித்திரை திருவிழாவிற்கு கொட்டகை முகூர்த்தக்கால் நடும் விழா: தல்லாகுளம் கோயிலில் நடந்தது

மதுரை, ஏப்.19-

கள்ளழகர் கோயில் சித்திரை பெருந்திருவிழாவிற்கு கொட்டகை முகூர்த்தக்கால் நடும் விழா தல்லாகுளம் பெருமாள் கோயிலில் இன்று காலை நடந்தது. இதில், ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டனர். மதுரை அருகே, அழகர்கோவிலில் உள்ள கள்ளழகர் கோயிலில் நடைபெறும் சித்திரை பெருந்திருவிழா உலக பிரசித்தி பெற்றதாகும். இதற்காக மதுரை தல்லாகுளம் பிரசன்ன வெங்கடாஜலபதி கோயிலில் கொட்டகை முகூர்த்தக்கால் நடும் நிகழ்ச்சி நடைபெறும். இதன்படி இந்தாண்டு திருவிழாவிற்கு தல்லாகுளம் கோயிலில் கொட்டகை முகூர்த்தக்கால் நடும் நிகழ்ச்சி இன்று காலை நடந்தது.

இதையொட்டி பூதேவி, ஸ்ரீதேவி சமேத பிரசன்ன வெங்கடாஜலபதி பெருமாளுக்கு விசேஷ பூஜை மற்றும் தீபாராதனை நடந்தது. காலை 7.55 மணியளவில் மேளதாளம் முழங்க நூபுரகங்கை தீர்த்த அபிஷேகத்துடன் கோயில் உள்பிரகாரத்திலும், ராஜகோபுரம் முன்பும் மாவிலை, பூமாலைகளால் இணைக்கப்பட்ட முகூர்த்தக்கால் நடப்பட்டது. முன்னதாக அழகரின் ஆயிரம் பொன்சப்பரத்தில் இணைப்பதற்காக யாழி திருமுகத்திற்கு சிறப்பு அபிஷேகம், பூஜைகள் நடைபெற்றன.

தொடர்ந்து வைகை ஆறு தேனூர் மண்டபத்திலும் முகூர்த்தக்கால் நடும்விழா நடைபெற்றது. இதில், கள்ளழகர் கோயில் இணை ஆணையர் ஹரிஹரன், கண்காணிப்பாளர்கள் பாலமுருகன், ரம்யா சுபாஷினி, பிஆர்ஓ முருகன், கோயில் பணியாளர்கள் உள்ளிட்ட ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டனர். கொட்டகை முகூர்த்தக்கால் ஊன்றியதை தொடர்ந்து அழகர்கோயிலில் இருந்து வண்டியூர் வரை அழகர் எழுந்தருளும் மண்டகப்படிகள் முன்பாக பந்தல் அமைக்கும் பணி தொடங்கியது.

சித்திரை திருவிழா ஏப்.27ல் துவக்கம்:

கள்ளழகர் கோயிலில் சித்திரை திருவிழா ஏப்.27ம் தேதி மாலை சுந்தரராஜ பெருமாளுக்கு காப்புக் கட்டுதலுடன் துவங்குகிறது. அன்று மாலை கோயில் திருக்கல்யாண மண்டபத்தில் சுந்தரராஜ பெருமாள் எழுந்தருளி பக்தர்களுக்கு காட்சி யளிக்கிறார். ஏப்.29ம் தேதி மாலை கள்ளழகர் பெருமாள் தங்கப்பல்லக்கில் பதினெட்டாம்படி கருப்பண சாமியிடம் உத்தரவு பெற்று வாணவேடிக்கையுடன் மதுரைக்கு புறப்படுகிறார். ஏப்.30ம் தேதி காலை மூன்றுமாவடியில் எதிர்சேவை, முக்கிய நிகழ்வான வைகையாற்றில் கள்ளழகர் இறங்கும் நிகழ்ச்சி மே 1ம் தேதி காலையும், 2ம் தேதி தேனூர் மண்டபத்தில் சேஷ வாகனத்தில் எழுந்தருளல், 3ம் தேதி ராமநாதபுரம் மன்னர் சேதுபதி மண்டபத்தில் பூபல்லக்கில் எழுந்தருளல், மே 4ம் தேதி அதிகாலை சேதுபதி மண்டபத்தில் இருந்து கள்ளர் திருக்கோலத்துடன் அழகர் கோயிலுக்கு புறப்படுதல், மே 5ம் தேதி காலை 11.40 மணிக்கு இருப்பிடம் சென்றடைதல் ஆகியவை நடைபெறுகிறது. மே 6ம் தேதி உற்சவ சாந்தியுடன் திருவிழா நிறைவு பெறுகிறது.

# பின்னலாடை தொழிலாளர்கள், நெசவாளர்கள் மத்தியில் தாக்கத்தை ஏற்படுத்துமா தவெக வாக்குறுதிகள்?

திருப்பூர், ஏப்.19-

திருப்பூரை அடுத்த பெருமாநல்லூரில் தவெக தலைவர் விஜய் கடந்த 2 நாள்களுக்கு முன்பாக தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபட்டபோது விசைத்தறி நெசவாளர்கள், சிறு, குறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களுக்கு பல்வேறு வாக்குறுதிகளை அறிவித்துள்ளார்.

திருப்பூர் மற்றும் அதனைச் சுற்றியுள்ள பல்லடம், தெக்கலூர், அவிநாசி உள்ளிட்ட பகுதிகளில் விசைத்தறிக் கூடங்கள் அதிக அளவில் உள்ளன. அதேபோல, திருப்பூரில் உள்ள பின்னலாடை உற்பத்தி சார்ந்த நிறுவனங்களில் சுமார் 90 சதவீதம் சிறு, குறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் உள்ளன. இந்த நிறுவனங்களில் பல லட்சம் தொழிலாளர்கள் பணியாற்றி வருகின்றனர்.

பார்க்க திரண்ட கூட்டம்: தவெக தலைவர் விஜய் தனது கட்சி வேட்பாளர்களை ஆதரித்து அவிநாசி அருகே உள்ள ஆட்டையாம் பாளையத்தில் இருந்து புதிய பேருந்து நிலையம் வரை, சாலை வலம் மேற்கொண்டபோது ஆயிரக்கணக்கானோர் சாலையின் இரு புறங்களிலும் நின்று உற்சாகமாக வரவேற்றனர்.

மேலும், பிரச்சாரக் கூட்டம் நடைபெற்ற பெருமாநல்லூர் நால் ரோட்டில் கூட்டம் நடைபெறுவதற்கு 5 மணி நேரத்துக்கு முன்னதாக இளைஞர்கள் மட்டுமின்றி, கல்லூரி மாணவிகள், வேலைக்குச் செல்லும் பெண்கள், ஆண்கள், முதியவர்கள் என அனைத்து வயதினரும் காத்திருந்தனர்.

இதன் காரணமாக கூட்டம் கட்டுக்கடங்காமல் சென்றதுடன், பிரச்சாரக் கூட்டம் முடிந்தும் பெருமாநல்லூரில் இருந்து திருப்பூர் புதிய பேருந்து நிலையம் செல்லும் சாலையில் சுமார் ஒன்றரை மணி நேரம் கடும் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது. விஜய்க்கு திரளும் கூட்டத்தால் தவெக கட்சியினர் உற்சாக மடைந்தாலும், மற்றொருபுறம் கூட்டம் நடிகரைப் பார்க்க வருவதாகவும், இது தேர்தலில் வாக்காக மாறாது என்றும் விமர்சனங்கள் உள்ளன.



விஜய் நெசவாளர்கள், பின்ன லாடைத் தொழிலாளர்களைக் குறிவைத்து அதிக அளவிலான வாக்குறுதிகளை அளித்துள்ளது தமிழக அரசியலில் பேசுபொருளாக மாறியுள்ளது. நெசவாளர்களின் தயாரிப்புகளை நேரடியாக சர்வதேச சந்தைகளில் விற்பனை செய்யும் வகையில் அரசுக்குச் சொந்தமான உலகளாவிய இகாமர்ஸ் பிராண்ட் உருவாக்கப்படும்.

முக்கிய நகரங்களில் கைத்தறி விற்பனை நிலையங்கள், ஷோரூம்கள் அமைக்கப்படும். நிலையற்ற நூல் விலை, மின்சார நெருக்கடியைப் பகிர்ந்துகொள்ள கைத்தறி, விசைத்தறி வைத்திருக்கும் ஒவ்வொரு நெசவாளர் குடும்பத்துக்கும் வங்கிகளின் மூலமாக ஆண்டுக்கு ரூ.30 ஆயிரம் செலுத்தப்படும். கைத்தறிகளுக்கான இலவச மின்சாரம் 500 யூனிட், விசைத்தறிகளுக்கான இலவச மின்சாரம் 1,500 யூனிட்டுகளாக உயர்த்தப்படும்.

நெசவாளர்களுக்கு உற்பத்தி செலவைக் குறைக்க அவர்கள் வாங்கும் ரசாயனம், சாயங்களுக்கு 50 சதவீதம் மானியம் வழங்கப்படும். அனைத்து நெசவாளர்களுக்கும் ரூ.10 லட்சம் ஆயுள் காப்பீடு வழங்கப்படும். நெசவாளர்களின் முதியோர் ஓய்வூதியம் மாதம் ரூ.3 ஆயிரமாக உயர்த்தப்படும். தமிழகத்தில் நெருக்கடியில் உள்ள சிறு, குறு மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கு ரூ.15 ஆயிரம் கோடி 'சேப் கிரெடிட் கியாரண்டி பண்ட்' உருவாக்கப்படும்.

ஜவுளித் துறையில் உள்ள சிறு, குறு மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கான பீக்ஹவர்ஸ் மின் கட்டணம் நிறுத்தி வைக்கப்படும். விரிவான ஆய்வுக்குப் பிறகு மின் கட்டணம் முறைப்படுத்தப்படும். இந்த நிறுவனங்களுக்கு அடுத்த 5 ஆண்டுகளுக்கு 100 சதவீத மின்சார வரி விலக்கு அளிக்கப்படும். சிறு, குறு மற்றும் நடுத்தர நிறுவனங்களை மேம்படுத்த, உலக அளவில் போட்டியிடும் வகையில் 35 சதவீத நேரடி மூலதன மானியம் வழங்கப்படும் என்பன உள்ளிட்ட அறிவிப்புகளை வெளியிட்டுள்ளார்.

விவசாயிகளுக்கான அறிவிப்புகள்: 5 ஏக்கருக்கு குறைவான நிலம் உள்ள விவசாயிகளின் கூட்டுறவு பயிர்க்கடன் தள்ளுபடி, அதற்கு மேல் உள்ள விவசாயிகளுக்கு 50 சதவீத பயிர்க்கடன் தள்ளுபடி வழங்கப்படும். குறைந்தபட்ச ஆதரவு விலைக்கு சட்டப்பூர்வ உத்தரவாதம் அளிக்கப்படும். நெல் குவிண்டாலுக்கு ரூ.3,500, கரும்பு டன் ஒன்றுக்கு ரூ.4,500 வழங்கப்படும்.



# ஊட்டி இத்தாலியன் பூங்காவில் மலர்கள் பூத்தாச்சு: சுற்றுலா பயணிகள் கண்டு ரசிப்பு

ஊட்டி, ஏப்.19-

ஊட்டி தாவரவியல் பூங்காவில் உள்ள இத்தாலியன் பூங்காவில் பெரும்பாலான செடிகளில் மலர்கள் பூத்துள்ளதால் சுற்றுலா பயணிகள் கண்டு ரசித்து செல்கின்றனர். ஆண்டுதோறும் கோடை சீசன் காலமான ஏப்ரல் மற்றும் மே மாதங்களில் ஊட்டிக்கு ஏராளமான சுற்றுலா பயணிகள் வருவது வழக்கம். இதுபோன்று கோடை சீசனின்போது ஊட்டி வரும் சுற்றுலா பயணிகளை மகிழ்விப்பதற்காக ஊட்டி அரசு தாவரவியல் பூங்காவில், பூங்கா முழுவதிலும் சுமார் 5 லட்சம் மலர் நாற்றுகள் நடவு செய்யப்பட்டு அதில் மலர்கள் பூத்து காணப்படும்.

மேலும் பல ஆயிரம் மலர் தொட்டிகளில் மலர் செடிகள் நடவு செய்யப்பட்டு அவைகள் மாடங்கள் மற்றும் புல் மைதானங்களில் அலங்கரித்து வைக்கப்படும்.

இதனை சுற்றுலா பயணிகள் கண்டு ரசித்துச் செல்வார்கள். குறிப்பாக மலர் கண்காட்சி நடக்கும் ஐந்து நாட்கள் தாவரவியல் பூங்காவில் பல்வேறு மலர்களால் ஆன அலங்காரங்கள் மேற்கொள்ளப்படும். இது தவிர பூங்கா முழுவதிலும் உள்ள மலர் செடிகளில் பல வண்ணங்களில் மலர்கள் பூத்துக் குலுங்கும். இதனை சுற்றுலா பயணிகள் கண்டு ரசித்துச் செல்வார்கள்.

தற்போது கோடை சீசன் துவங்கி உள்ள நிலையில் நாள்தோறும் ஏராளமான சுற்றுலா பயணிகள் ஊட்டிக்கு வந்த வண்ணம் உள்ளனர். இந்நிலையில் ஊட்டி அரசு தாவரவியல் பூங்காவில் இத்தாலியன் பூங்காவில் நடவு செய்யப்பட்டுள்ள பெரும்பாலான மலர் செடிகளில் தற்போது மலர்கள் பூத்துக் காணப்படுகிறது. குறிப்பாக டேலியா மலர்கள் பல வண்ணங்களில் பூத்துக் காணப்படுகிறது. இதனை சுற்றுலாப் பயணிகள் கண்டு ரசித்துச் செல்வது மட்டுமின்றி அதன் அருகே நின்று புகைப்படம் எடுத்துச் செல்கின்றனர். ஓரிரு நாட்களில் பூங்காவில் உள்ள அனைத்து செடிகளிலும் மலர்கள் பூத்துவிடும். மே மாதம் முதல் வாரம் முதல் ஊட்டி வரும் சுற்றுலாப் பயணிகள் இந்த மலர்களை கண்டு ரசித்து செல்லலாம்.









# சோழன்திட்டை அணையில் இருந்து தண்ணீர் சுசீந்திரம் தெப்பகுளம் வாய்க்காலில் உள்ள அடைப்பு சரிசெய்யும் பணி

நாகர்கோவில், ஏப்.19-

சுசீந்திரம் தெப்பகுளத்திற்கு சோழன்திட்டை அணையில் இருந்து தண்ணீர் கொண்டு வரும் வாய்க்காலில் ஏற்பட்டுள்ள அடைப்பை சரிசெய்யும் பணி நடந்தது. சுசீந்திரம் தாணுமாலையன்சுவாமி கோயில் தெப்பகுளத்தில் இடிந்த மதில்சுவர் மற்றும் மையமண்டபம் சீரமைக்கும் பணி ரூ.1 கோடியே 43 லட்சம் செலவில் தொடங்கியது. பழமை மாறாமல் மதில்சுவர் அமைக்கும் பணியும், மையமண்டபம் சீரமைக்கும் பணியும் வேகமாக நடந்து வந்தது. சித்திரைமாத தெப்பதிருவிழா தொடங்குவதற்கு முன்பு பணியை முடிக்க அறநிலையத்துறை அதிகாரிகள் அறிவுரை வழங்கினர்.

இந்த நிலையில் சீரமைக்கும் பணி கடந்த 2 தினங்களுக்கு முன்பு முடிவு அடைந்தது. இந்த நிலையில் தெப்பதிருவிழா நாளை (18ம் தேதி) தொடங்குகிறது. தெப்பவிழா வருகிற 27ம் தேதி நடக்கிறது. தெப்பவிழாவிற்கு தேவையான தண்ணீர் சுசீந்திரம் பழையாற்றில் இருந்து எடுக்க முடிவு செய்யப்பட்டது. தற்போது கோடைகாலம் என்பதால், ஆற்றில் குறைவான தண்ணீர் வந்துகொண்டு இருப்பதால், தெப்பகுளத்திற்கு வரும் மடைவழியாக தண்ணீர் கொண்டு வருவதில் சிக்கல் ஏற்பட்டது.

அதைத்தொடர்ந்து சோழன்திட்டை அணையில் இருந்து மோட்டார் மூலம் பம்பிங் செய்து கொண்டுவர முடிவு செய்யப்பட்டது. அதன்படி இரண்டு பெரிய மோட்டார் மூலம் அணையில் இருந்து தண்ணீர் பம்பிங் செய்யப்பட்டு, தெப்பகுளத்திற்கு தண்ணீர் கொண்டுவரப்பட்டு, பணிகள் இரவு பகல் பாராமல் நடந்து வருகிறது. சோழன்திட்டை அணையில் இருந்து தெப்பகுளத்திற்கு குறைந்த அளவே தண்ணீர் வந்தது. தண்ணீர் கொண்டுவரும் வாய்க்காலில் அடைப்பு ஏற்பட்டு இருப்பதை அறிந்த அறநிலைத்துறை அதிகாரிகள், அந்த அடைப்பை எடுக்க நடவடிக்கை மேற் கொண்டனர். அதன்படி நாகர் கோவில் மாநகரா ட்சிக்கு சொந்தமான அடைப்பை எடுக்கும் வாகனத்தை வரவழைக்கப்பட்டு, தெப்பகுளத்திற்கு வரும் வாய்க்காலில் உள்ள அடைப்பை எடுக்கும் பணி நடந்தது. தெப்பவிழாவிற்கு எந்தவித பாதிப்பும் இல்லாமல் தெப்பகுளத்தை நிரப்ப போதிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என அறநிலையத்துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

# ஸ்ரீவைகுண்டத்தில் கள்ளபிரான் கோவிலில் சித்திரை தேரோட்டத்தில் பரபரப்பு

தூத்துக்குடி, ஏப்.19-

தூத்துக்குடி மாவட்டம் ஸ்ரீவைகுண்டத்தில் கள்ளபிரான் கோவிலில் சித்திரை தேரோட்டம் தொடங்கிய நிலையில் தேரைத்தலும் தடி திடீரேன்று உடைந்ததால் தேரோட்டம் நிறுத்தப்பட்டது.

தூத்துக்குடி மாவட்டம், ஸ்ரீவைகுண்டம் கள்ளபிரான் கோவில் தாமிரபரணி ஆற்றங்கரையில் அமைந்துள்ளது. 108 திவ்ய தேசங்களில் ஒன்றான நவதிருப்பதி ஸ்தலங்களில் முதலாவதாக கருதப்படும் இக்கோவிலில், சித்திரை திருவிழா வெகு விமரிசையாக கொண்டாடப்படும்.

நவதிருப்பதி தலங்களில் முதல் தலமான ஸ்ரீவைகுண்டம் கள்ளபிரான் கோவிலில் சித்திரை திருவிழா கடந்த வாரம் தொடங்கியது. சித்திரைத்திருவிழாவின் ஒருபகுதியான தேரோட்டம் இன்று காலை நடந்தது. சித்திரை திருவிழாவில் 9ஆம் நாளான இன்று திருத்தேரோட்டம் தொடங்கிய நிலையில் பக்தர்கள் தேரை வடம் பிடித்து இழுத்துக் கொண்டிருந்தபோது தேரை தள்ளும் தடி உடைந்ததால் பக்தர்கள் அதிர்ச்சியடைத்தனர் தொடர்ந்து தேரின் தடியை சீரமைக்கும் பணி நடைபெற்றதால் சுமார் ஒரு மணி நேரத்திற்கு மேலாக தேரை இழுக்க முடியாமல் பக்தர்கள் காத்திருந்தனர்.

முன்னதாக கடந்த 9ம் தேதி கொடியேற்றத்துடன் துவங்கியது. அன்று அதிகாலை, கோவில் நடை திறக்கப்பட்டு விஸ்வரூபம், நித்தியல், கோஷ்டி, திருமஞ்சனம் நடந்தது குறிப்பிடத்தக்கது.






## R.கோவிந்தராஜ்



ஜாதி, மத வேறுபாடுகளை மறந்து நாம் காட்டும் இந்த ஒற்றுமைதான், நல்லாற்றில் மீண்டும் தெளிந்த நீரை ஓடச் செய்யும் அஸ்திவாரம். அரசும், மாவட்ட நிர்வாகமும் முழு ஒத்துழைப்பு வழங்க வேண்டும். பொதுப்பணித்துறை மற்றும் நகராட்சி நிர்வாகங்கள் இணைந்து நிதி ஒதுக்கீடு செய்து, தூர்வாரும் பணிகளைப் போர்க்கால அடிப்படையில் தொடங்க வேண்டும் என்பதை உணர்ந்து இருதரப்பும் இணைந்து செயல்பட வேண்டிய தருணம் இது.

## S.அருணாசலம்



2000 ஆண்டு காலப் பழமையும், சமவெளியில் தோன்றும் தனித்துவமும் கொண்ட நம் புண்ணிய நதி 'நல்லாறு' மீண்டும் உயிர் பெற வேண்டியது காலத்தின் கட்டாயம். நல்லாற்றை மீண்டும் வற்றாத நீரோட்டமாக மாற்றும் முயற்சியில் உறுதியுடன் பயணிக்கிறோம்.

## லூ.ஜேம்ஸ் கென்னடி



முன்னோர்கள் நமக்காக விட்டுச் சென்ற நீர் வளங்களைப் பராமரிக்காமல் சிதைப்பது, வருங்கால சந்ததியினருக்கு நாம் செய்யும் மிகப்பெரிய வரலாற்றுத் துரோகம். இந்த நதி மீட்புப் பணிதான், நமது பிள்ளைகளுக்கு நாம் விட்டுச் செல்லக்கூடிய மிக உயரிய மற்றும் மகிழ்ச்சியான வாழ்வாதாரப் பரிசாகும்.

## S.வெங்கடாசலம்



மனிதம் தழைக்கவும், கால்நடைகள் மற்றும் பறவைகள் உள்ளிட்ட அனைத்து உயிரினங்கள் அழியாமல் வாழவும் இந்த நீர்நிலைகளே மூல ஆதாரமாக விளங்குகின்றன.நீர்நிலை பாதுகாப்பு என்பது ஒரு இயக்கத்தின் கடமை மட்டுமல்ல, அது ஒவ்வொரு குடிமகனின் பொறுப்பு.

## பாலசுப்பிரமணியம்



தூர்வாரப்படாமல் கிடக்கும் நதியைச் சீரமைப்பது வெறும் சுற்றுச்சூழல் பணி மட்டுமல்ல, இது லட்சக்கணக்கான மக்களின் குடிநீர் ஆதாரத்தைச் சார்ந்த வாழ்வாதாரப் பிரச்சினை. ஆற்றின் இருபுறமும் கரை அமைத்து, மரக்கன்றுகள் நட்டுப் பராமரிக்க வேண்டும்.

## S.சசிகுமார்



அழிவின் விளிம்பில் உள்ள இந்த இயற்கைச் செல்வத்தை மீட்டெடுத்து, மீண்டும் நன்னீர் ஓடும் ஆறாக மாற்ற, சமூக ஆர்வலர்களும் பொதுமக்களும் ஒன்றிணைந்து, நமது எதிர்கால சந்ததியினருக்காக நல்லாற்றைப் பாதுகாக்க, கைகோர்க்குமாறு அன்புடன் அழைக்கிறேன்.

## A.S.செந்தில்குமார்



சாயக்கழிவுகள் மற்றும் அதிகாரிகளின் அலட்சியத்தால் நிலத்தடி நீர் பாதிக்கப்பட்டு, இப்பகுதியின் விவசாயம் மற்றும் குடிநீர் ஆதாரங்கள் முழுமையாகச் சிதைந்துவிட்டன.வற்றாத நதியாக இருந்த நல்லாறு இன்று, மாசடைந்த சாக்கடை ஆறாக மாறியிருப்பது வேதனைக்குரியது.

## S.காமராஜ்



இழந்த நீர்வளத்தை மீட்டெடுத்து, வருங்கால சந்ததியினரும் அனைத்து உயிர்களும் செழிப்பாக வாழும் சூழலை உருவாக்க நல்லாற்றை ரசாயனக் கழிவுகளிலிருந்து மீட்டு, மீண்டும் ஒரு தூய நதியாக ஓடச் செய்ய அனைத்து நல்வுள்ளங்களும் ஓரணியில் திரள வேண்டும்.

## K.சரவணன்



நம் முன்னோர்கள் தடுப்பணைகள் மற்றும் குளங்களை உருவாக்கி நீர் ஆதாரங்களைப் போற்றிப் பாதுகாத்தனர்; ஆனால், இன்று நாமோ அவற்றைப் பாழாக்கி வருகிறோம். இதன் மூலம், நமது அழிவை நாமே தேடிக்கொள்கிறோம் என்ற உண்மையை மக்கள் உணர வேண்டிய தருணம் இது.

## C.நடராஜ்



முன்னிருந்த நல்லாற்றின் அணைகள் தடம் தெரியாமல் உள்ளது. நல்லாற்றை மீட்டெடுக்க அரசும் மற்றும் பொதுமக்களும் கவனத்தில் எடுத்துக் கொள்ள வேண்டிய வழிமுறைகளை பின்பற்ற வேண்டும்.

## K.ராமசாமி



நல்லாறு சுகாதரமற்ற முறையில் உள்ளது. பூண்டி பாலத்தில் செல்லும் போது தூர்நாற்றம் அடிக்கிறது. தூர்வாரி விவாசாயிகளுக்கும், பொதுமக்கள் பயன்பாட்டிற்க்கும் நல்லாற்றில் நல்ல தண்ணீர் ஓட பொதுபணிதுறை மூலம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

## A.சுப்பிரமணி



தெரிந்தே செய்த தவறுகளைத் திருத்திக் கொள்ளவும், இனியும் அத்தவறுகள் தொடராமல் இருக்கவும் மக்கள் மத்தியில் பெரும் மாற்றத்தை ஏற்படுத்த இந்த இயக்கம் பாடுபடுகிறது.




■ நல்லாறு நதியை மீட்டெடுக்க வலியுறுத்தி அவிநாசி தொகுதி பாஜக வேட்பாளர் எல்.முருகன், திருப்பூர் வடக்கு தொகுதி அதிமுக வேட்பாளர் எம்.எஸ்.எம்.ஆனந்தன், திருப்பூர் வடக்கு தொகுதி தவெக வேட்பாளர் சத்தியபாமா ஆகியோர்களிடம் நல்லாறு பாதுகாப்பு இயக்கத்தினர் சார்பாக கோரிக்கை மனு அளிக்கப்பட்டது.



■ நல்லாறு பாதுகாப்பு இயக்கம் சார்பில் நாம் தமிழர் கட்சி திருப்பூர் வடக்கு சட்டமன்ற வேட்பாளர் அபிநயா பிரேம்குமார் அவர்களிடம் மனு கொடுக்கப்பட்டது




■ பல தலைமுறைகளைக் கண்ட நல்லாற்றைத் தூர்வாரக் கோரி, அவிநாசி தொகுதி திமுக கூட்டணி வேட்பாளர் செல்வி கோகிலாமணியிடம் நல்லாறு பாதுகாப்பு இயக்க நிர்வாகிகள் நேரில் மனு அளித்தனர்




■ மக்களின் தாகம் தீர்க்கும் நல்லாறு நதியை மீட்டெடுக்க வலியுறுத்தி, அவிநாசி தொகுதி தவெக வேட்பாளர் கமலியிடம் நல்லாறு பாதுகாப்பு இயக்கத்தினர் சார்பாக கோரிக்கை மனு அளிக்கப்பட்டது.



■ மக்களின் வாழ்வாதாரமான நல்லாற்றை மீட்கக் கோரி, அவினாசி தொகுதி நாம் தமிழர் கட்சி வேட்பாளர் மேனகாவிடம் நேரடி மனு. "ஆட்சி மாறினாலும் காட்சி மாற வேண்டும்" என நதி பாதுகாப்பு நிர்வாகிகள் அதிரடி முன்னெடுப்பு.



■ நமது நல்லாறு பாதுகாப்பு இயக்கம் சார்பில், திருப்பூர் வடக்கு தொகுதி மதசார்பற்ற முற்போக்கு கூட்டணியின் சிபிஐ வேட்பாளர் இரவி அவர்களிடம் நல்லாறு கோரிக்கை மனுவை வழங்கியபோது

# "நல்லாற்றை மீட்போம்... நற்பணியில் இணைவோம்!"

## தன்னார்வலர்களுக்கு அழைப்பு விடுத்த நதி பாதுகாப்பு இயக்கம்!

திருப்பூர் மாவட்டத்தின் உயிர்நாடியான நல்லாற்றைப் பாதுகாக்கவும், அதன் பொலிவை மீட்டெடுக்கவும் நல்லாறு பாதுகாப்பு இயக்கம் தற்போது ஒரு ஆக்கபூர்வமான அடுத்த கட்ட நடவடிக்கையைத் தொடங்கியுள்ளது.

**யாரெல்லாம் இணையலாம்?**

பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்கள்: இயற்கையை நேசிக்கும் இளைய தலைமுறையினர். நல்லாற்றின் தூய்மையைப் பேணிப் பாதுகாப்பது குறித்த விழிப்புணர்வை அடுத்த தலைமுறைக்குக் கொண்டு செல்ல மாணவர்களே மிகச்சிறந்த தூதுவர்கள் என இயக்க நிர்வாகிகள் நம்புகின்றனர். மாணவர்களின் இந்த எழுச்சி, நல்லாற்றை மீண்டும் ஒரு தெளிந்த நதியாக மாற்றும் என்பதில் ஐயமில்லை.

சமூக ஆர்வலர்கள்: சுற்றுச்சூழல் பாதுகாப்பில் அக்கறை கொண்டவர்கள்.

பொதுமக்கள்: ஜாதி, மத பேதமின்றி நதி மீட்பு என்ற ஒற்றை இலக்கோடு செயல்பட விரும்புவோர்.

**தொடர்பு கொள்ள:**

இந்த உன்னதப் பணியில் தங்களை இணைத்துக் கொள்ளவும், மேலதிக விபரங்களைப் பெறவும் நல்லாறு பாதுகாப்பு இயக்கத்தின் ஒருங்கிணைப்பாளர்களைக் கீழ்க்கண்ட எண்களில் தொடர்பு கொள்ளலாம், இதே எண்களில் வாட்ஸ் அப்பிலும் பதிவு செய்து கொள்ளலாம் ...

**94433 47569 9442147279 94429 19504**

ஏற்கனவே வலிமையாகச் செயல்பட்டு வரும் இந்த இயக்கம், களப்பணியின் மூலம் நல்லாற்றை மீண்டும் ஒரு தெளிந்த நீரோடையாக மாற்ற முடியும் என்ற நம்பிக்கையை மக்களிடையே விதைத்து வருகிறது. இந்தத் தன்னார்வ முயற்சி திருப்பூரின் ஒட்டுமொத்த நதி பாதுகாப்பு இயக்கத்திற்கு ஒரு முன்னுதாரணமாக அமையும் என எதிர்பார்க்கப்படுகிறது.










SAKKRA VIYUGAM owned and published by PAL PANDIAN, printed at SHANLAX PRESS 66, VP COMPLEX, TPK MAIN ROAD, VASANTHA NAGAR, MADURAI-625003, Published at 70/53 A1, THILAGAR NAGAR 1ST STREET, ANUPPARPALAYAM, TIRUPPUR, TAMIL NADU-641652 Editor: PAL PANDIAN Phone : 88705 00000